P.R.NO: 408

04.7.2007

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செய்தி வெளியீடு

குடியரசுத் தலைவர் தேர்தல், 2007

வாக்குப் பதிவு நடக்கும் இடமும், காலமும்

19.7.2007 ஆம் நாளன்று நடைபெறவிருக்கும் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு வாக்குப் பதிவு செய்யும் இடமாக சென்னை 600 009, தலைமைச் செயலகப் பிரதானக் கட்டிடத்தின் கீழ்த்தளத்திலுள்ள "சட்டமன்ற குழுக் கூட்ட அறை" இந்திய தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப் பெற்றுள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களும், சென்னையில் வாக்களிக்க விரும்புவதாக தேர்தல் ஆணையத்திடம் ஏற்கெனவே தெரிவித்து அனுமதி பெற்ற பாராளுமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களும் மேற்குறிப்பிட்ட இடத்தில் வாக்களிக்கலாம். சென்னையில் வாக்களிக்க விரும்பும் பாராளுமன்ற உறுப்பினர் தனது அடையாள அட்டையை உதவி தேர்தல் அதிகாரியிடம் காண்பிக்க வேண்டும் அல்லது வாக்களிக்க ஏதுவாக உதவி தேர்தல் அதிகாரிக்கு ஏற்பு அளிக்கும் வகையில், அவர் வாக்காளர் என்பதை நிரூபிக்க வேண்டும்.

சென்னை–9, தலைமைச் செயலகப் பிரதானக் கட்டிடத்தின் கீழ்த்தளத்திலுள்ள "சட்டமன்ற குழுக் கூட்ட அறையில்" 2007 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19–ஆம் நாள், வியாழக்கிழமை காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை வாக்குப் பதிவு நடைபெறும்.

திரு. மா. செல்வராஜ், செயலாளர், சட்டமன்றப் பேரவை, இத்தேர்தலுக்கு உதவித் தேர்தல் அதிகாரியாகவும், தேர்தல் சாவடியின் தலைமை அதிகாரியாகவும் இருப்பார்.

தலைமைச் செயலகம்
சென்னை–600 009.

மா. செல்வராஜ்,
செயலாளர்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
மற்றும்
உதவித் தேர்தல் அதிகாரி,
குடியரசுத் தலைவர் தேர்தல் 2007

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை
சென்னை.